செய்தி வெளியீடு எண் : 560 நாள் : 17.03.2023

<u>செய்தி வெளியீடு</u>

## <u>தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில் பூம்புகார் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆற்றிய உரை.</u>

மாமல்லபுரத்தில் 16.03.2023 அன்று தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில் பூம்புகார் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையுரையாற்றி பேசியபோது:–

"தமிழர்களின் அடையாளமே அவர்களின் கலை, பண்பாடு, நாகரிகம். இதில் முதலில் வருவது கலை. அந்த கலையை போற்றி வளர்த்திடவும், கைவினை கலைஞர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், கலைப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திடவும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 1973ஆம் ஆண்டு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒரு பொதுத் துறை நிறுவனமாக "பூம்புகார்" என்ற பெயரில் துவக்கப்பட்டு 50 ஆண்டுகளை கடந்து தனது சேவையை வழங்கி வருகிறது. பூம்புகார் நிறுவனம், 7 உற்பத்தி நிலையங்கள் மற்றும் 21 விற்பனை நிலையங்களுடன் செயல்பட்டு நடப்பாண்டு ரூ.40 கோடி மதிப்பான கலை பொருட்களை விற்பனை செய்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அதிக விற்பனை ஆகும். கைவினைஞர்களை ஊக்கப்படுத்த தமிழ்நாட்டின் சிறந்த கைவினை கலைஞர்களுக்கு 263 விருதுகள் வழங்கி இந்தியாவிலேயே அதிக விருதுகளை வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20 நபர்களுக்கு வாழும் கைவினை பொக்கிஷ விருது, மாநில பூம்புகார் விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

அதனை தொடர்ந்து இந்த விழாவில் **குழு உற்பத்தி விருதுகள்–** 3 குழுவிற்கு ரொக்க பரிசாக தலா ரூ.40,000, 4 கிராம் தங்க பதக்கம், தாமிரம் பத்திரமும். **சான்றிதழ் பயன்பாடு சார்ந்த கைவினை பொருட்கள் விருது–**3 நபர்களுக்கு ரொக்க பரிசாக ரூ.40,000 4 கிராம் தங்க பதக்கம்,தாமிரம் பத்திரம், சான்றிதழும், **பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது**, 85 நபர்களுக்கு ரொக்க பரிசாக தலா ரூ.10,000, 5 கிராம் வெள்ளி நாணயம், சான்றிதழும், **அடுத்த_தலைமுறைக்கான கைவினை விருது –** 150 இளைய கைவினைஞர்களுக்கு ரொக்க பரிசாக ரூ.2,000, 5 கிராம் வெள்ளி நாணயம், சான்றிதழும் என ரூ.25 லட்சம் மதிப்பிலான பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டார்கள்.

நலிந்த கைவினை தொழில்களுக்கு உதவிடும் வகையில் மாநில மற்றும் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் 13 இடங்களில் பொது பயன்பாட்டு மையங்கள் ரூ.60 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், காஞ்சிபுரம், அரும்பாவூர், தம்பம்பட்டி, அம்பாசமுத்திரம், ஆசனூர்,விக்கிரவாண்டி, பத்தமடை ஆகிய பொது பயன்பாட்டு மையங்களை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.இதன் மூலம், 6 ஆயிரம் கைவினை கலைஞர்கள் பயனடைந்து

வருகிறார்கள். கைவினை கலைஞர்களால் தயாரிக்கப்படும் பொருள்களை விற்பனை செய்ய பெருநகரங்கள் மற்றும் சுற்றுலா தலங்களில் விற்பனையுடன் கூடிய நகர்ப்புர கண்காட்சி திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் ரூ.2 கோடியே 75 லட்சம் மதிப்பிலும், மாமல்லபுரத்தில் ரூ.4 கோடியே 70 லட்சம் மதிப்பில் நகர்ப்புர குடில்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் மாமல்லபுரத்தில் உள்ள கண்காட்சி திடல் 14 விற்பனை அரங்குடன் ரூ.1 கோடி செலவில் விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. கைவினை கலைஞர்களின் உற்பத்திக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த நாச்சியார் கோயில், மதுரை, வாகைகுளம், சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, மாமல்லபுரம் ஆகிய 7 உற்பத்தி நிலையங்கள் ரூ. 3 கோடியே 50 லட்சம் செலவில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சென்னை, கோவை, புது டெல்லி, கொல்கத்தா ஆகிய 4 விற்பனை நிலையங்கள் ரூ.5 கோடி செலவில் புதுப்பித்து அழகுபடுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. கைவினைஞர் கலைஞர் அதிகம் வாழும் பகுதிக்கு முக்கியத்துவம் அளித்து மேம்படுத்தும் விதமாக சேலம் மாவட்டம், தம்பம்பட்டியை ரூ.1 கோடி செலவில் மரச்சிற்ப கைவினை கிராமமாக அமைக்க திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. மாமல்லபுரத்தில் ரூ.2 கோடியே 24 லட்சம் மதிப்பில் கைவினை சுற்றுலா கிராமம் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இதில், மாமல்லபுரத்தின் நுழைவாயிலில் சிற்ப வேலைப்பாடு நிறைந்த 40 அடி உயர சிற்பக்கலை தூண் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 27.7.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும், காரணை கிராமத்தில் 27 குடியிருப்புகள், ஐந்து ரத வீதியில் 34 உற்பத்தி நிலையங்கள் புதுப்பித்து அழகுபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது என்றும், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் கைவினை கலைஞர்களின் நலனுக்காக செயல்படுத்தும் நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை பெற ரூ.75 லட்சம் செலவில்தமிழ்நாடு முழுவதும் 17 இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு உள்ளது. இந்த முகாம்களில், இதுவரை 1200 கலைஞர்கள் கலந்து கொண்டு பயனடைந்து உள்ளனர். இம்முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து நடத்தப்படும் எனத் தெரிவித்துக் கொண்டார்.

பாரம்பரிய மற்றும் தனித்துவம் வாய்ந்த பொருட்களுக்கு அதன் சிறப்பை உணர்த்த ஒன்றிய அரசு புவிசார் குறியீடு வழங்குகிறது. தஞ்சாவூர் – தட்டு, ஓவியம், பொம்மை வடசேரி – கோயில் நகைகள், சுவாமிமலை – பஞ்சலோக சிற்பங்கள், மாமல்லபுரம் – கற்சிற்பம் போன்று தமிழ்நாட்டின் 9 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுள்ள நிலையில், மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்தில் தலைசிறந்த கள்ளக்குறிச்சி – மரச்சிற்பம், கருப்பூர் – கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் – நெட்டி வேலை, அரும்பாவூர் – மரச்சிற்பம் ஆகிய 4 கைவினை பொருட்களுக்கு புவிசார் குறியீடு சான்றிதழை 23.10.2021 அன்று வெளியிட்டார்கள். இவ்வாறு, பாரம்பரிய கலைகளை பாதுகாத்திடவும், சிறந்த கைவினை கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், நலிந்த கலைஞர்களுக்கு உதவிடவும், பொது பயன்பாட்டு மையங்கள் கைவினை கலைஞர்கள் கிராமம், மாநில – மாவட்ட அளவில் விருதுகள், உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் விரிவாக்கம், நகர்ப்புர குடில்கள், விழிப்புணர்வு முகாம்கள் என எண்ணற்ற நலத்திட்டங்களை கழக அரசு நிறைவேற்றி

வருகிறது. எனவே கலைஞர்களை போற்றி பாதுகாக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கழக அரசு உங்களுக்கு என்றும் துணை நிற்கும் எனக் கூறினார்".

இந்நிகழ்ச்சியில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ் பாலாஜி, செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.பாபு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மை செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஷோபனா, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு. ராகுல்நாத், இ.ஆ.ப., விருது பெறும் கைவினை கலைஞர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in